NW EDK
EDK-Ost
BKZ

Nordwestschweizerische Erziehungsdirektorenkonferenz
Erziehungsdirektoren-Konferenz der Ostschweizer Kantone und des Fürstentums Liechtenstein
Bildungsdirektoren-Konferenz Zentralschweiz

மத்திய சுகாதார அமைச்சின் ஒத்துழைப்புடன்

டொச் சுவிஸ் மக்கள் பாடசாலைத் திணைக்கள-மாநாட்டின் (DVK) துண்டுப்பிரசுரம் விளங்கிக்கொள்ள உதவியாக

# பாலர் பாடசாலைப் பிள்ளைகளுக்கு (1H மற்றும் 2H)* நோய்- மற்றும் தடிமன் காய்ச்சல் அறிகுறிகள் இருந்தால் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்

## பெற்றோர்களுக்கான குறிப்புகள் மற்றும் பரிந்துரைகள்

**பங்குனி 2022 வரை செல்லுபடியாகும்**

**கட்டாயம் பரிசோதனை செய்யவேண்டும், எப்போதென்றால்:**
– நோய் அறிகுறியுள்ள 6 வயதுக்கு மேற்பட்ட ஒரு நபருடன் நெருங்கிய தொடர்பு (ஆபத்தான தொடர்பு) இருந்திருந்தால்
– சாதகமான பரிசோதனை முடிவு பெற்ற ஒரு நபருடன் நெருங்கிய தொடர்பு (ஆபத்தான தொடர்பு) இருந்திருந்தால் -எந்த வயதினராக இருப்பினும்-
– ஆபத்தான தொடர்பு இல்லாவிட்டாலும் ஆகக்குறைந்தது சிவப்பு நிறத்தால் குறிப்பிடப்பட்டிருக்கும் அறிகுறிகள் தென்பட்டால், ஆனால் ஏற்கனவே தெரிந்திருந்த நீண்டகால நோய்கள் இதில் அடங்காது

தடிமன் மற்றும் /அல்லது தொண்டைநோவு அத்துடன் /அது இல்லாது இலகுவான இருமல் காய்ச்சல் இல்லை

→ இருப்பினும் பிள்ளை நன்றாக உள்ளது → உங்கள் பிள்ளை பாலர்பாடசாலை செல்லலாம்

**கடுமையான இருமல்** நீண்டகாலம் இருக்கும் நோயின் காரணமாக ஏற்படாமல் இருந்தால், உ.ம்.தொய்வு மற்றும்/அல்லது
**காய்ச்சல்** 38,5 பாகைக்கு அதிகமாக

**மற்றபடி பிள்ளை நன்றாக உள்ளது**
→ ஆம் → **உங்கள் பிள்ளை வீட்டில் இருக்க வேண்டும்**
வகுப்பாசிரியருக்கு அறிவிக்கவும்!

**வேறு உபாதைகள் ஏற்படுகின்றனவா?**
– வயிறு-குடல்-உபாதைகள்
– தலையிடி
– உடல் வலி
– சுவை-மற்றும் வாசனை உணர்வு இழப்பு

இல்லை → **மூன்று நாட்களுக்குள் சிறப்பான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா?**
ஆம் → ஆம் / இல்லை → **உங்கள் பிள்ளைக்கு ஆகக் குறைந்தது 24 மணித்தியாலம் காய்ச்சல் இல்லையா?**
ஆம் → உங்கள் பிள்ளை பாலர்பாடசாலை செல்லலாம்

ஆம் (வேறு உபாதைகள்) / இல்லை (முன்னேற்றம்) →

**பிள்ளைக்கு உடல் நலமில்லை**
→ **உங்கள் பிள்ளையின் ஆண் அல்லது பெண் வைத்தியரை நீங்கள் தொடர்பு கொள்ளுங்கள்.**
மேலதிக நடவடிக்கைகள் குறித்து வைத்தியர் வேறு விடயங்களுடன் ஒரு பரிசோதனை செய்வது குறித்தும் முடிவுசெய்வார்.

பரிசோதனை செய்யப்பட்டால்

பரிசோதனை செய்தது மற்றும் பரிசோதனை முடிவு அறிவிக்கும்வரை **பாடசாலை செல்ல வேண்டாம்!**

பரிசோதனை முடிவு …
பாதகம் → உங்கள் பிள்ளைக்கு ஆகக் குறைந்தது 24 மணித்தியாலம் காய்ச்சல் இல்லையா?
சாதகம் →

அறிவிக்கப்பட்டபடி தொடர்புகளை அறியும் மேலதிக நடவடிக்கை, சிகிச்சை வழங்கும் வைத்தியரின் பராமரிப்பு.
**பிள்ளை வீட்டில் தங்கவேண்டும.**

தனிமைப்படுத்தல் முடிந்த பின்பு → உங்கள் பிள்ளை பாலர்பாடசாலை செல்லலாம்

**உங்கள் பிள்ளை பாலர்பாடசாலை செல்லலாம்**

NW EDK
EDK-Ost
BKZ
Nordwestschweizerische Erziehungsdirektorenkonferenz
Erziehungsdirektoren-Konferenz der Ostschweizer Kantone und des Fürstentums Liechtenstein
Bildungsdirektoren-Konferenz Zentralschweiz

மத்திய சுகாதார அமைச்சின் ஒத்துழைப்புடன்

டொச் சுவிஸ் மக்கள் பாடசாலைத் திணைக்கள-மாநாட்டின் (DVK) துண்டுப்பிரசுரம் விளங்கிக்கொள்ள உதவியாக

# ஆரம்ப- மற்றும் உயர்தரப் பிள்ளைகள் மற்றும் இளையோர் (3H மற்றும் 11H)* நோய்- மற்றும் தடிமன் காய்ச்சல் அறிகுறிகள் இருந்தால் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்

## பெற்றோர்களுக்கான குறிப்புகள் மற்றும் பரிந்துரைகள்

**உங்கள் பிள்ளை எப்போது வீட்டில் இருக்க வேண்டும்?**

ஆரம்ப- மற்றும் உயர்தரப் பிள்ளைகள் மற்றும் இளையோருக்கு (3H மற்றும் 11H) தற்போது புதிதாக வயதுவந்தவர்களைப் போன்ற மருத்துவ அளவுகோல் செல்லுபடியாகும். அதாவது:

நோய்- மற்றும் தடிமன் காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டு, அது கொவிட்-19 போன்று இருந்தால், அந்தப் பிள்ளை அல்லது இளையோர் வீட்டில் இருப்பதுடன் வைத்தியரிடம் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

→ பரிசோதனையில் சாதகமாக வந்தால், தனிமைப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும்.
→ பரிசோதனையில் பாதகமாக வந்தால், அந்தப் பிள்ளை அல்லது இளையோர் 24 மணித்தியாலங்கள் எவ்வித அறிகுறியும் இல்லாதவரை வீட்டில் இருக்க வேண்டும்.

இந்த எளிய நடைமுறை மூலம் ஆரம்ப- மற்றும் உயர்தரப் பிள்ளைகள் தாம் சொந்தமாக நடந்துகொள்ளும் முறைகள் குறித்து அறிந்து கொள்ளலாம்.

*ஹார்மோஸ் (*HarmoS)* குறியீட்டின் பிரகாரம்